# அமரர்

# காசிபதி.அரசரெத்தினம்

# அவர்களின்



## 31ம் நாள் நினைவு மலர்


## 30.08.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்பணம்

எங்கள் அன்புக்குப் பாத்திரமான அப்பாவே நீங்கள்
எமக்கு ஒளியானீர், விவசாயத்தின் விரிவாளனே
விவசாயிகளின் உயிர் நாடியே உறவுகளின் உறவால்
ஈர்ந்த உங்களை உத்தமனாய்ப் போற்றும் இலங்கை
வானொலியில் உழுதுண்டு வாழ்வோர்க்கு மகத்தான
சேவையாற்றிய சேவகனே, மதஞ்சாரா எண்ணம்
கொண்ட சிந்தை கமத்தொழில் விளக்கம் கண்டால்
ஊரும் உலகும் முகத்தார் வீடு விவசாய கேள்வி பதில்
தந்து கணீர் என ஒலிக்கும் கம்பீரமான சேவையிலும்
நோயுற்றிருந்தாலும் கடமை தவறா உன் உள்ளம்
சேவையின் போதும் சேர்ந்து வாழும் போதும் நீங்கள்
காட்டிய பரிவினை நினைக்கும் போது நெஞ்சு
உருகுகிறது. 31ம் நாளை நினைத்து பல நூலில் எழுதிய
உமக்கு இந்நூலை இறுதியாய் சமர்ப்பிக்கின்றோம்.



\- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில்
12.11.1941

விண்ணில்
31.07.2023

# அமரர்.
# திரு.காசிபதி அரசரெத்தினம்

## திதிவெண்பா

போற்றுமுயர் சோபகிருதாம் வருடமதில்
ஏற்ற முறும் ஆடி மாதத்தில் – மாற்றமுறு பிறைவளரும்
பூரணை பூர்வபக்க சதுர்த்தசி திதியதனில்
இறைவனடி சேர்ந்தார் இசைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சீராபள்ளிக்
குன்றுடையானைக் கூறவென் உள்ளம் குளிருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உடையாள் யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிர்இல்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் அறிமுகமானவர் அமரர். கா. அரசரெத்தினம்

விஞ்ஞான தொழில்நுட்ப ஆதிக்கத்தால் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் பாரிய மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நவீனயுகத்தில் பழைய பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள், ஒழுக்கவிழுமியங்கள் செயலிழந்து நல்ல மனிதர்களைக் காண முடியாத கவலையான நிலை சமுதாயத்தில் இருக்கிறது. இந்நிலைமையை சரியாகச் சிந்திக்கின்ற ஒவ்வொருவருக்குமுள்ள கவலையாகவும் இருக்கிறது. இந்தப் பொதுவான நிலைமைக்குள்ளும் இதற்கு விதி விலக்காக நல்ல சில மனிதர்களும் இல்லாமலில்லை. அந்த வகையில் நல்லதோர் அடையாளமாக விளங்கியவர் அமரர். கா. அரசரெத்தினம் அவர்களாகும். இவர் பழமைக்கும் புதுமைக்கும் உறவுப் பாலமாக விளங்கியவர்.

இவர் நல்லதொரு மனிதர் என்ற கூற்றுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. இவரது மறைவு அவரது குடும்பம், உறவினர்கள், அவர் சார்ந்த சமூகத்தினால் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவரது பெயர், தோற்றம், நடை, உடை, தாழ்ந்தகுரல், செயற்பாடுகள் யாவும் அவருக்கே உரிய விசேடத்துவம் கொண்டவை. இவை நல்ல மனிதர் என்ற எண்ணப்பாட்டை ஏற்படுத்தக் கூடியவை நீதி, நேர்மை, ஒழுக்கம், நடுநிலை என்பவற்றில் அவருக்கு நிகர் அவரே.

பழுகாமத்தில் மதிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தவர் தந்தையார் அமரர் காசுபதி அவர்கள் சமுதாயத்தில் போடிப்பட்டம் பெற்றவர். 'காசுப்போடியார்' இது பல்கலைக் கழகப்பட்டத்திற்கும் மேலானது. தாய் அமரர். வள்ளியமை அவர்களும் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது சகோதர சகோதரிகள் சிறந்த கல்வி கற்றவர்கள். மதிப்புமிக்க பாரம்பரியத்தைக் கொண்டவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். கா. அரசரெத்தினம் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினார். இவர் தனது ஆரம்பக்கல்வியை தரம் 1-3 வரை பழுகாம மெதடிஸ்த மிசன் (M.M.School) கற்றார். கல்வியில், ஒழுக்கத்தில் சிறந்த மாணவர் என்ற பெயர் பெற்றார். தொடர்ந்து தரம் 4-5 வரை பழுகாமம் கனிஷ்ட ஆங்கில பாடசாலையில் (தற்போதுள்ள கண்டுமணி மகா வித்தியாலயம்) பயின்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று மட்/ காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடை நிலைக் கல்வியை தொடர்ந்தவர். பின்னர் தமிழ் மாணவர்கள் மட்/ வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டவேளை அவரும் மட்/ வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்து தனது இடை நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்து S.S.C பரீட்சையில் சித்திபெற்றார். இவரது சகோதரி செல்வி. கா. அரியமலர் அவர்களும் பழுகாமம் கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மட்/ வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரம் (H.S.C) வரை கல்வி கற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அமரர். கா. அரசரெத்தினம் அவர்கள் S.S.C பரீட்சையில் சித்திபெற்றதைத் தொடர்ந்து கரடியனாறு விவசாயப் பண்ணையில் பயிற்சியைப் பூர்த்தி செய்து குண்டகசாலை விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா பட்டத்தைப் பெற்று விவசாய போதனாசிரியர் (A.I) பதவியைப் பெற்று சிறப்புடன் பணியாற்றியவர்.

படுவான் கரையில் பழுகாமத்து மக்கள் கல்வியில் நன்கு உருசி கண்டவர்கள். கல்வி சரிவந்தால் யாவும் சரிவரும் என்ற சிந்தனையுடையவர்கள். ஆரம்பக்கல்வியை பழுகாமத்தில் பெற்று இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என்பவற்றை வெளியில் மட்டக்களப்பு நகரப்பாடசாலைகளில் பெற்று கல்வியில், பதவியில் உயர்பதவிகளைப் பெறவேண்டும் என்ற கனவை பழுகாமத்தின் மாணவர் சமூகத்துக்கு ஏற்படுத்தியவர்களில் அமரர். கா. அரசரெத்தினம் அவர்களும் முக்கியமானவர். இந்தவகையில் பழுகாமத்தின் கல்விச் செழுமைக்கு முக்கிய முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்பதில் பெருமைக்குரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். கா. அரசரெத்தினம் AI என்ற பெயரும், விவசாய போதனாசிரியர் பதவியும் பழுகாமத்தை வெளியுலகுக்கு கொண்டு வந்து பிரபலப் படுத்தியது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இவரது விவசாய போதனாசிரியர் பதவியின் பெரும் பகுதிச் சேவைக்காலம் அக்காலத்து இலங்கை வானொலியில் விவசாய நிகழ்ச்சிப் பிரிவில் பணியாற்றியதாகும். இலங்கை வானொலியில் விவசாய கேள்வி விடை நிகழ்ச்சி பிரபலமானது. இதை நடத்திய பெருமைக்குரியவர் இவரே. இலங்கை வானொலியில் இவரது குரலும், விவசாய ஆலோசனைகளும் விவசாய அறிவூட்டலும் தமிழ் விவசாயிகளின் காதில் உரத்து ஒலித்தன. இதனால் இவரை அறியாத எந்த விவசாயியும் இருக்கமுடியாது. இதனூடாக ஒழுக்கமுள்ள, விவசாய அறிவுள்ள விவசாயப் பரம்பரை ஒன்றை வழிநடத்திய பெருமை அமரர். கா. அரசரெத்தினம் அவர்களுக்கே உரியது. தற்போதைய பரம்பரைக்கு மறைமுகமானவராக இருந்தாலும் பழைய பரம்பரைக்கு மிகமிக அறிமுகமானவர்.

தனது ஓய்வு நிலைக்காலத்தில் தனது அறிவு, தொழில் அனுபவத்தைப் பயன்படுத்தி தனது பிறந்த மண்ணில் (பழுகாமம்) விவசாயிகளுக்கு உதவுவதற்காகவும் விவசாய முன்னோடிப் பண்ணை ஒன்றை அமைத்து வழிநடத்தியவர். இதனூடாக விவசாய அறிவு ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் பயன்பெற்றவர்கள் அதிகம் ஆனால் அக்காலத்தில் நிலவிய போர்சூழலும், அவரது முதுமையும் அதனைத் தொடர தடையாக அமைந்துவிட்டமை துர்அதிஸ்டமானது.

திருகோணமலை திரியாய் கிராமத்தில் நன்மனைவியை கரம்பற்றினார். பழுகாமத்திலேயே மனையமைத்து குடும்ப வாழ்க்கையை தொடர்ந்தவர். நல்ல குடும்ப உறவினர்களுடன் நல்ல வாரிசுகளுக்குமுரியவர். அவரது வாரிசுகளான மகனும்,மகளும் வெளிநாட்டில் (பிரித்தானியா) சிறந்த கல்வி, தொழிலுடன் சிறப்பாக வாழுகின்றனர். அத்துடன் பிறந்த ஊருக்காக அதன் முன்னேற்றத்துக்கு முன்னின்று உழைப்பவர்களாகவும் உள்ளனர். என்பது பெருமைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ச்சூழலின் தாக்கம் இவரையும் நேரடியாகப் பாதிக்கத் தவறவில்லை. இதனால் பூஜா தடுப்பு முகாமிலும் சிறைப்பட்டிருந்த அனுபவமும் இவருக்கிருந்தது. அவ்வேளையிலும் பூஜா முகாமில் தன்னிடனிருந்து தம்மைப் பார்வையிடவரும் உவினர்கள் மூலமாக புத்தகங்களைப் பெற்று கற்பித்தலிலும் ஈடுபட்டவர் என்ற நல்ல செய்தியும் பயன்பெற்றவர்கள் மூலமாக அறியக் கூடியதாக உள்ளமை பெருமைக்குரியது.

அமரர். கா. அரசரெத்தினம் அவர்களின் இழப்பு அவரின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள். அவர் சார்ந்த சமூகத்துக்கு பேரிழப்பாக அமைந்துள்ளது. அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிராத்திப்போம். அத்துடன் அவரின் நல்ல எண்ணங்கள், பண்புகள், நடத்தைகள், செயற்பாடுகள் என்பவற்றைத் தொடர்ந்து பின்பற்றி அவருக்கு நன்றி தெரிவிப்பதுவே அனைவரதும் காலத்தின் தேவையாகும்.

நன்றி

**தெ. சுப்பிரமணியம்**
**ஓய்வு நிலை- கோட்டக்கல்விப் பணிப்பாளர்.**
**பாண்டிருப்பு.**

**"வெற்றி குறித்த நமது**
**பார்வை திண்ணமாய்**
**இருந்தால் தோல்வி நம்மை**
**பாதிக்கவே பாதிக்காது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் குமுறல்

அப்பா எங்கள் ஆருயிர் அப்பா
எப்போ காண்போம் எழிலான அப்பா
இப்போ உன்நினைவு ஏங்கியே அப்பா
ஒப்பே இல்லை உன் கருணை உள்ளம் அப்பா
நப்பாசை கொள்ளாமல் வாரிவழங்கிய அப்பா
தொப்புள் கொடி இரண்டை தூய்மை இட்ட அப்பா
எப்போதும் என்மனதில் ஏற்றும் தீபம் அப்பா

என் உயிரில் கலந்திருக்கும் எண்ணமெல்லாம் நீவீரே
மண்ணுயிர் போல் எம் உயிரை காத்து நின்ற பன்னீரே
தன்மையான மாமாவே தாகத்திலே தண்ணீரே
விண்ணுலகம் புகுந்தாயே வேண்டுகிறோம் சாந்தி நன்னீரே
பண்பான உம் பிரிவால் பதறுகிறோம் கண்ணீரால்
கண்ணனவன் கீதை போல் காவலனே விண்ணீரில்
திண்ணமாக கலந்து விட்ட தெய்வம் நீ பொன்னீரே
சின்னவர் நான் யாசிக்கின்றேன் சாந்திபெற கண்ணீரால்.

பேரப்பிள்ளைகள் நாங்கள் கண்ணீரில் பதறுகிறோம்
மாரடித்தும் ஓயவில்லை மனக்குமுறலில் கதறுகிறோம்
ஆரிருப்பார் எங்கள் ஆழ்கவலை சிதறடிக்க
வேர் முறிந்த ஆல் மரம் போல விழிநீரில் உதறுகிறோம்
யார் எமக்கு காவலாக வருவாரே கதறுகிறோம்
பாரினிலே உம்மைப்போல் பாதுகாப்பின்றி சிதறுகிறோம்.
கூரடித்த இல்லா இல்லம் போல் கண்ணீரில் குமுறுகிறோம்
நீரடித்த நீர் போல நின்று சாந்தி வேண்டுகிறோம்.

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை தந்தை சொல்
மிக்க மந்திரமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை உலகிலே விழி நீரில் வாடுகிறோம் வெம்பி
அழுததில் சோதனை இல்லை
பந்த பாசங்களின் ஆறுதலினால் உமை மறந்து
கவலை தீரவுமில்லை
நொந்து போன மக்கள் - மருமக்கள் பேரப்பிள்ளைகளின்
சந்ததி எல்லாம் கண்ணீரில் வாடுகின்றோம்.
எந்தநாளுமே யாசிக்கின்றோம் உம் ஆன்மா சாந்தி
பெற வேண்டுகின்றோம்.
கந்தனருளால் கருணை புரிய வேண்டி
தந்தை அரசரெத்தினம் அப்பாவின் ஆன்மா சாந்தி பெற வந்தனை செய்வோம்.

**ஆண்டாண்டு தோறும் அழுது**
**புரண்டாலும் மாண்டார் வருவாரோ**
**மாநிலத்தில் வேண்டா நமக்கும் அது**
**வழியே நாம் போமவ்வளவும்**
**எமக்கென்று இட்டு உண்டு இரும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் கரையாத அன்பு மாமா அமரர். காசிபதி அரசரெத்தினம் அவர்களுக்கு எனது அன்புக் காணிக்கை

**"தக்கார் தகவிலர் என்பவர் அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"**

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் குறட்பாவுக்கு அமைவாக வாழ்ந்து இறைபதம் அடைந்தவர் தான் அன்பு மாமா. மாணிடனாகப் பிறந்த எவரும் உலகில் பிறக்கும் போது எதையும் கொண்டு வரவும் இல்லை இறக்கும் போது எதையும் கொண்டும் செல்வதுமில்லை ஆனால் நாம் உலகில் வாழ்கின்ற காலத்துள் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பதைப் பகுத்தறிந்து செயற்படுவது நமது கடமையாகும். ஏனெனில் நாம் பகுத்தறிவு கொண்ட மனிதர்கள் எனவே வாழ்கின்ற சொற்பகாலத்துள் அரிய செயல்களைச் செய்வதன் மூலம் எமது பிறப்பின் நோக்கம் நிறைவடையும்.

மாமாவின் இளமைக் கல்வியை ஒருதரம் மீட்டிப் பார்க்கின்றேன். பழம் பெரும் பதியாம் திருப்பழுகாமத்தில் தந்தை காசுபதிக்கும் தாயார் எலிசபெத் வள்ளியம்மைக்கும் மூன்றாவது குழந்தையாக இம் மண்ணிலே 12.11.1941ம் ஆண்டு அவதரித்தார். இளமைக் கல்வியை பழுகாமத்தில் உள்ள மெதடிஸ்த மிசன் வேதப்பாடசாலை, மட்/ காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம். அதனைத் தொடர்ந்து வந்தாறு மூலை மத்திய மகா. வித்தியாலயத்திலும் கல்வி கற்றார். S.S.C பரீட்சையில் சித்தியடைந்த அவர் கரடியனாறு விவசாயக் கல்லூரியில் பயின்று அதனைத் தொடர்ந்து விவசாய டிப்பிளோமா பட்டத்தை குண்டகசாலையிலும் பெற்றுக் கொண்டார்.

அவரது கல்வித் தகுதிக்கு ஏற்ப விவசாயப் போதனாசிரியர் யு.ஐ பதவி கிடைத்தது. இத்துடன் நின்றுவிடாமல் தனது அறிவினை மேம்படுத்த நினைத்தார் தமது கல்வியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்த பல நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றினார். இறுதியில் வெற்றியும் கண்டார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் நடாத்தப்படும் விவசாய நிகழ்ச்சிப் பிரிவில் இணைந்து கொண்டார். மாவட்ட, மாகாண ரீதியாகச் சென்று விவசாயக் கல்வியை மேம்படுத்துவதற்காக இளைஞர் விவசாயக் கழகங்களில் அங்கத்தவர்களாக செயற்படும் திறமையான மாணவர்களை இனம் கண்டு வினாவிடைப் போட்டி எனும் அடிப்படையில் நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தார். இவருடன் இணைந்து அமரர் ஸ்ரீஸ்கந்தராசா (பணிப்பாளர்), எழில் வேந்தன், மயில்வாகனம் சர்வானந்தா, அருணாசெல்லத்துரை போன்றோர் ஒத்துழைப்பு வழங்கினர்.

தமிழ் மாவட்டங்களில் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத் தாபனத்தில் வானொலி விவசாய அறிவுப் போட்டி நடாத்தும் கா. அரசரெத்தினத்தைத் தெரியாதவர்கள் அன்று எவருமே இல்லை மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது பங்களிப்பை விட யாழ்ப்பாணம், மலையகம் போன்ற இடங்களில் அவரது புகழ் கொடிகட்டிப் பறந்தது.

அமரர். அரசரெத்தினம் மாமா அவர்கள் நடாத்திய வானொலி விவசாய அறிவுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெறும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது. மட்டக்களப்பு நகரசபை கேட்போர் கூட்டத்தில் அந்நிகழ்வு நடைபெற்றது. பரிசில்களாக அக்காலத்தில் புதிதாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட ஐந்து (05) ரூபாய் வெள்ளி நாணயமே வழங்கப்பட்டது. ஒரு கேள்விக்கு விடை அளித்தால் ஒரு நாணயம் என்ற ரீதியில் வழங்கப்பட்டது. ஒருவருக்கு ஐந்து (05) வினாக்கள் மட்டுமே கேட்கப்பட்டது.

இவரது இல்லற வாழ்க்கையை ஒருமுறை நோக்குவோமானால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் என்றும் பழம் பெரும் கிராமத்தில் உள்ள வந்தோரை வாழவைக்கும் புகழ் பெற்ற விவசாயக் குடும்பத்தில் அருணாசலம் கனகம்மா தம்பதியினரின் ஏக புதல்வியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேஸ்வரியை திருமணம் செய்த கொண்டார். தனது சொந்தக் கிராமமான பழுகாமத்துக்கு அவரை அழைத்து வந்து வீடொன்றை அழகுற அமைத்து இல்லற வாழ்க்கையை இனிது நடாத்தி வந்தார். அன்புக் குழந்தைகளான சுரேஸ், தர்சிகா என்பவர்களை ஈன்றெடுத்து முறையாக அவர்களுக்குரிய கல்வியைக் கொடுத்தார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சிறிது காலம் சிறைவாசமும் சென்றுவந்தார்.

தனது ஓய்வுக்காலத்தை நல்ல முறையில் கழிக்க விரும்பினார். அதற்கேற்றார் போல் கொட்டகலையில் அமைந்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினால் நிறுவப்பட்ட மாதிரி பண்ணையில் பணிப்பாளராகக் கடமையாற்றினார். அங்கு சிறிதுகாலம் கடமையாற்றிய பின் தனது சொந்தக் கிராமத்தில் மாதிரி விவசாயப் பண்ணை ஒன்றை நடாத்த விரும்பி அதற்காக தமது உறவினரின் வயல் காணியை கொள்வனவு செய்தார். எமது கிராமம் விவசாயத்துடன் இணைந்துள்ளதால் மாதிரி வேளாண்மைச் செய்கையை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். அத்தோடு மரக்கறி தோட்டம் ஒன்றையும் முன்மாதிரியாகச் செய்துகாட்டி மக்களிடம் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்டார்

ஓய்வு நிலையில் வீட்டில் இருந்தாலும் கல்விப் புலத்தில் விவசாய வளவாளராகச் செயற்பட்டார். அன்னாரின் சேவை இறைவனுக்குப் போதும் போல் இருந்தது. திடீரென சுகவீனம் ஏற்பட்டு மட்டக்களப்புக்கு கொண்டு வரப்பட்டார். இருந்தும் அவர் பூரணமாக சுகமடையவில்லை. அவரது அன்புக் குழந்தைகள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் அவர்களது அன்பும் ஆதரவும் என்றும் கிடைத்துக் கொண்டே இருந்தது.


**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக வாழ்ந்து காட்டிய பெருந்தகையாவார். அவ்வாறான பெருந்தகை எவரும் எதிர் பாராத வகையில் 31.07.2023ம் நாளன்று இறைபதம் அடைந்தார். இவரது இழப்பு அவரது குழந்தைகளுக்கு மட்டுமன்றி அவர் சமூகம், கிராமம் அனைத்துக்கும் பெரும் இழப்பாகும். மாமா எம்மை விட்டுப் பிரிந்தாலும் எமது எல்லோர் மனதிலும் நிலை கொண்டே இருப்பார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் வேண்டி நிற்கின்றோம்.

**அன்பு மருமகன்**
**குரு. த. கனகசூரியம்**
**(அதிபர்)**
**திருப்பழுகாமம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பு அப்பப்பா

Thank you for everything you gave us so that we could have a good future. You and Appamma raised two children with love, teaching them kindness and respect. Now these two children have created two beautiful families. Appa and aththai are the most loving and caring people we've ever known. You were able to teach them important lessons about life and about themselves. That is the greatest gift anyone can give. You inspired many farmers and achieved great things in agriculture. Your help to create a better future for those in need will not be forgotten. Meeting those who were a part of your life enlightened us to how you supported others and how the memories of you are treasured. Appappa, you will continue to live on in all our hearts. For everything you did, we are all grateful and we all love you. We will miss you Appappa. You are now with God and our loving Appamma.

Rest in peace Appappa.

**என்றும் அன்புடன்**
**நீரஜா, பானுஜன்,**
**ஸ்ரீகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அம்மப்பா

Although we were not able to spend as much time together as we wished, our few visits to Sri Lanka consist of memories of you that will never fade. Our last visit to you was something we will never forget, especially the way you held and kissed our hands. We were never able to communicate like others, but your simple gestures always conveyed your never-ending love and support. Stories passed on from Amma and Mama gave us an insight into what a sweet voice you had, one that will be remembered by many. We were honoured to visit the places where a part of you will always live on. The small seeds you planted decades ago have now grown, proudly standing tall and bearing fruits for the community. Your generosity that has passed through generations will continue to live on through our meaningful actions. Together with our family and your everlasting support, we will make you proud.

**அன்புடன்**
**அபிரா, அர்ச்சிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை தவறாத ஆளுமை மிக்க உழைப்பின் சிகரமான மனிதனாகச் செயல்பட்ட அமரர். அரசரெத்தினம் மாமா

இவர் இலங்கையின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள மட்டுமா நகரின் தென்திசையில் காணப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருப்பழுகாமம் என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்தவர். இவர் பெரிய கவுத்தன்குடி வேளாளர் இனத்தைச் சார்ந்தவர். இவர் தாயை தெய்வமாகப் போற்றியதுடன் தாயின் விருப்பப் படியே தனது செயல்களைச் செயல்படுத்துவார். தான் பிறந்த சொந்தக் கிராமத்தில் அதிக பற்றுக் கொண்டவர். இவரின் ஆரம்பக்கால வாழ்க்கையில் குடும்பதின் பொருளாதார நிலை கஸ்ரமானதாக காணப்பட்டதால் வாழ்க்கையில் வசதி வாய்ப்புக்கள் காணப்பட்ட போதும் தனது வாழ்க்கையையோ தன்னைச் சார்ந்தவர்கள் வாழ்க்கையையோ எப்போதும் எளிமையான முறையில் ஆளுமையுடன் நேர்மையாகவும் சிக்கனமாகவும் வாழ்வதற்கு வழி காட்டியவர்.

அமரர் அரசரெத்தினம் மாமாவுடன் பழகும் வாய்ப்பு எனக்கு 1977ஆம் ஆண்டின் பின்பு ஏற்பட்டது. எனது வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்த தெய்வமாகவே நான் அவரைக் காண்கின்றேன். அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவின் ஊடாக வானொலி விவசாய அறிவுப் போட்டிகளை திட்டமிட்டு நடத்தும் விவசாயப் போதனா ஆசிரியராகக் காணப்பட்டார். இவரின் தொழில் சம்பந்தமாக இவர் இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் எல்லாப் பிதேசங்களுக்கும் சென்று தனது பணியை மேற்கொண்டார். இவரின் சுபாவம் இவர் எல்லா மக்களுடனும் அன்பாக பழகுவார். அத்துடன் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் தன்னால் முடிந்தளவிற்கு செய்து கொடுப்பார். அதனால் இவரை மலையகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த மக்கள் ஒரு தெய்வமாகவே கருதினர். கொழும்பு, கண்டி, மாத்தளை போன்ற பிரதேசங்களில் இவரின் நண்பர்களுடன் பழகும் வாய்ப்பை மாமாவே எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். இதனால் மாமா மக்களுடன் எளிமையாகப் பழகும் தன்மை, அவர்களுக்கு கல்வி, தொழில் ரீதியாக அவர் செய்யும் உதவி போன்றவற்றை நான் அறியக் கூடியதாக இருந்தது. இது மட்டுமன்றி அவர் தனது இனத்தைச் சார்ந்தவர்களுக்கும், உறவினர் நண்பர்களுக்கும் தன்னாலான நிறைய உதவிகளை செய்துள்ளார்.

இவர் விவசாயம் சம்மந்தமாக அறிவுபூர்வமாகவும் அனுபவரீதியிலும் பாண்டியத்தியம் பெற்றவர் இவர் பெற்ற அறிவை நடைமுறையில் தானாகவே பயன்படுத்திக் காட்டுவதிலும் சமூகங்களுக்கிடையே பரப்பி பயன்படுத்தச் செய்வதிலும் வெற்றி கண்டவர். அவரால் கோடிட்டுக் காட்டப்பட்ட சில முதுமொழிகள்

**"கற்பது கற் கண்டே"**
**"லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்"**
**"சேற்றிலே கால் வைத்தால் தான்"**
**"சோற்றிலே கை வைக்கலாம்"**
**"ஓடுபவன் எல்லோரும் ஜெயிப்பதில்லை**
**ஜெயிப்பவன் எல்லாம் ஓடுவதும் இல்லை"**

இவ்வாறான முதுமொழிகளுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியதுடன் மற்றவர்களையும் வாழச் செய்தவர்

**தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்**
**தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை**
**மருத்தை நம்மாலே உலகம் கற்கும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் மகாகவி பாரதியாரின் கூற்றானது மாமாவின் இறுதிக் கட்ட வாழ்கையில் எமக்கு எடுத்துக் காட்டாகவும் ஏற்றுக் கொள்ள கூடியதாகவும் அமைந்துள்ளமையை என்னால் உணர முடிகின்றது அன்னார் உலக வாழ்வில் அர்பணித்துச் செய்த அனைத்து நன்மைகளையும் நினைவு கூர்ந்து பிறவாப் பேரின்பத்தை எம் பெருமான் வழங்கப் பிராத்தித்து விடை பெறும் அன்பு மருமகள்

**ச. சோமேஸ்வரி** B.A Dip in E.d
**பிரதி அதிபர்.**

**"வெற்றி குறித்த நமது**
**பார்வை திண்ணமாய்**
**இருந்தால் தோல்வி நம்மை**
**பாதிக்கவே பாதிக்காது"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீந்தில் பற்பம்

சாதிக்காய், வசிவாசி, கராம்பு, அதிமதுரம், ஏலம், இலவங்கம் கோட்டம் குறாசாணி, திற்பிலி , சுக்கு, மிளகு, கடுகு, ரோகணி, காவரிசி, நற்சீரகம் கருஞ்சீரகம், ஓமம், பெருங்காயம், கொத்தமல்லி, மதுமத்துவிரை கருங்கொள்ளு இவை களஞ்சி - 1 (5g), சீனப்பாகிழங்கு பலம் - 1 (35 கிராம்) பொற்சீந்தில் தண்டு - பலம் - 2 (70 கிராம்) இவைகளை உரலில் இடித்து சீலையில் அரித்து சூரணமாக்கி வைத்துக் கொண்டு காலை, மாலை இருநேரம் ஒருநாளைக்கு நேரம் ஒன்றுக்கு 5 கிராம் வீதம் ஏழு நாள் தேன் அனுமானத்தில் உண்ண நீரழிவு, வாய்காய்தல், சக்கரைநோய், சிறுநீர் கடுப்பு, நீர் ஆரகல், சிறு நீர்க்கிருச்சனம் என்பன குணமாகும்.

## வயிற்றுக் குத்துப்பொடி

முற்றிய வேப்பம்பட்டை ஒரு பிடி, பிரண்டை அரைபிடி, மணியுப்பு, சாறணைவேர் ஒருபிடி, கடுக்காய் நற்சீரகம், கருஞ்சீரகம், திற்பிலி, வேர்க்கொம்பு உள்ளி இவைகளை இடித்து கல்லுபோல வந்த பின் காய வைத்து பிறகு இடித்து சீலையில் அரித்து வெந்நீரில் ஒரு நாளைக்கு இருநேரம் 5 கிராம் வீதம் 3நாள் கொடுக்க வயிற்றுக் குத்து வயிற்று இரச்சல் குணமாகும்.

## வெந்தய தைலம்

உலுவா அவித்து பிளிந்தசாறு படி- 1, நல்லெண்ணை படி - 1, சாதிக்காய், கராம்பு, ஓமம், பெருஞ்சீரகம், சாதிபத்திரி, உள்ளி, கிருமிசத்துரு, மதுரம், திற்பிலி, மல்லி களஞ்சி - 1, சரக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளை இடித்து வடிகட்டி அரித்து அரைத்துப் போட்டு மெழுகு பதம் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு உஷ்ணம், சூடு, தலைபாரம், தலையிடி என்பனவற்றிற்கும் மனம் அமைதி பெறவும் கண்தெளிவு பெறவும் தலையில் பூசலாம்.

## கெற்ப சாந்தி சூரணம்

மாவிலங்கை, அழுக்கிரா, முருங்கை, எருக்கு, நொச்சி, காத்தோட்டி காண்டை, சாறணை தலைசூடுவள்ளி பெருங்குருந்து, வட்டு, தூதுவிளைவேர், காயம், தேவதாரகம், கோட்டம் திறிசாதி, கடுகு, உள்ளி, இருசீரகம், கடுக்காய், நெல்லிக்காய், உலுவரிசி, சுக்கு, மிளகு, ஓமம், கடுகுரோகிணி - சாரணை இந்துப்பு, வாய்விளங்கம் இவை தலா களஞ்சி - 4 எடுத்து சுத்தி செய்து காய வைத்து இடித்து சீலையில் வடி கட்டி அரித்து சேமித்து பாதுகாப்பாக வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு இரு நேரம் வீதம் 5 கிராம் சூரணத்தை தேனில் கலந்து 11 நாட்கள் உண்டு சுடு நீர் பருகவும்.

## செங்கத்தாரி சாறணை

அழுக்கிரா தூதுவிளை, இசங்கு, வெள்ளைத்துத்தம், சிவநார்வேம்பு பலம் -1, நத்தைச்சூரி பலம் - 1 (35 கிராம்) இடித்து சீலையில் அரித்து வேளை 5 கிராம் வீதம் ஒரு நாளைக்கு இரு நேரம் வீதம் 7 நாள் உண்ணவும் (கடுப்புபதார்த்தம் தவிர்க்கவும்) உஷ்ண வாதம் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுர குளிகை

சுக்கு, கடுக்காய், மிளகு, பொரிகாரம், நொச்சிதுளிர், இதரம், நேர்வாளம், பொன்னரிதாரம், நாவி, சாதிலிங்கம் களஞ்சு - 1, கையான்தகரை சாற்றில் அரைத்து தூதுவிளஙகாய், பிரமாணம் உருட்டி நிழல் உலர்த்தி முலைப்பாலில் ஒரு நாளுக்கு இரு வேளை வீதம் 3 நாள் கொடுக்க சுரம் தீரும்.

## பறங்கிப்புண் ரிணங்களுக்கு திறிசாதி

வங்கம் இதரம் நாவி - களஞ்சி - 1 நெறுவி'ம் மனோசீலை காந்தம் - களஞ்சி - 1, சீனப்பாகிழங்கு - றாத்தல் - 2, தூளை இடித்து முடக்கொத்தான் சாறில் அரைத்து (படியில்) பூசவும்

## விரேசன குடிநீர்

திருக்கொண்டம் வேர்பட்டை, நறுக்குமூலம், முத்தக்காச்சு கடுக்காய் - களுஞ்சி 1 1/4 இடித்து தூளை விளக்கெண்ணையில் போட்டு இந்துப்பு களஞ்சி - 1 தூவி காய்ச்சி மெழுகு பதம் இறக்கவும்.

## விரேசனம்

புளியமிலை அவித்த கசாயம் திறிபாலை (கடுக்காய் நெல்லிக்காய் தான்றிகாய்) ஏலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாவரம் பூ எண்ணெய்

பீநாறி, செந்சந்தனம், இலவங்கம்கோட்டம் வேம்பாடல், சாத்திரபேதி, அதிமதுரம், கைப்புக்கட்டி, புளியம் விதைதோல், அரிதாரம், கெந்தகம், சாதிலிங்கம், கொடுவேலிவேர், தைவேளைவேர், நத்தைசூரிவேர், நேர்வாளம், துத்தம், துரிசி, கிருமி சத்துரு - களஞ்சி - 1, பொன்னாவரம் பூ சாறு கொத்து - 1, நல்லெண்ணை கொத்து - 1, சரக்கு வகை இடித்து அரித்து அரைத்து செம்பருத்தி இலைச்சாறு படி1/2, ஈரவெங்காயச்சாறு படி 1/2, கருவேப்பிலைசாறு படி 1/2, முடிதோடம்பழச்சாறு படி 1/2 எல்லாம் போட்டு மெழுகு பதம் காய்ச்சி - குழந்தைகள் பிள்ளைகள், சகலருக்கும் பூசலாம். தலையிலும் மேனியிலும் ஒரு சிட்டிகை உள்ளும் கொடுக்கலாம். கிரந்தி அக்கரம் சொடுகு, தோல் சம்பந்தமான நோய்கள் தீரும், கண்வெளிச்சம், முடி வளர்ச்சி பெறும்.

# சீதபேதி மாத்திரை

சாதிக்காய், மாசாக்காய், சீரகம், கராம்பு, உலுவா, கோரோசனை, வசிவாசி, கடுக்காய்பூ, அசிவிடயம், அபின், கசகசா, வாளம் இடித்து அரித்து முலைப்பாலில் அரைத்து உழுந்து பரிமானம் உருட்டி நிளலுலர்த்தி வைத்து கொண்டு குழந்தைகளுக்கு ஒரு மாத்திரையும் பெரியவர்களுக்கு 2 மாத்திரையும் கொடுக்கவும்.

# மூல காங்கை லேகியம்

கறுஞ்சீரகம், நற்சீரகம், அரிதாரம், அதிமதுரம், சுக்குமிளகு, திப்பிலி, ஏலம், தக்கோலம், கடுக்காய், தான்றிக்காய், சிறுநாகம்பூ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்காயம் களஞ்சி -01, லாமிச்சை வேர், பாரிசாதம், தூதுவளை, அமுக்கிரா, பொன்னாங்காணி, நிலப்பனங்கிழங்கு, இவை சம எடை தூள் செய்து கற்கண்டு, எள்ளுடன் பசுநெய்யில் கிண்டி தினம் இருவேளை கொட்டைப்பாக்கு பிரமாணம் உண்ண மூலமுளை இரத்தம் மூலம் வெளி மூலம் உள்மூலம் தீரும் - 30 நாள் பத்தியம் கிரந்தி பொருட்கள்.

## முகம் கோணல் வாங்கல் முகவாத சன்னிக்கு தைலம்

வெண்நொச்சி சாறு - படி 2, தழுதாளை, வீளி, களச்சி, முடக்கொத்தான், வேலிப்பருத்தி, நீர்வெற்றிலை, இசங்கு, தயிர்விளா, குப்மேனி, கரிசாலைசாறு படி - 1, விளக்கெண்ணை வேப்பெண்ணை - படி - 1 சுக்கு, மிளகு, திற்பிலி, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுதேக்கு சித்தரத்தை கர்க்கடகசிங்கி கற்கோலம், தேவதாரம், மஞ்சில் சிறு நாகம்பூ, வசம்பு, சதகுப்பை, கடுகுரோகிணி, கறிமஞ்சள், மண்சிட்டி, இந்துப்பு, கடுக்காய், வெட்பாலரிசி இவைகள் - 2 ஆவின் பாலில் அரைத்து நல்லெண்ணை படி - 2 சேர்த்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து தலையிலும் உடம்பிலும் பூசவும் சன்னி வாத முகம் கோணல் வாதம் தீரும்.

## சுவாத மூச்சிக் குழிகை

இதரம், கெந்தகம், வெண்காரம், மனோசீலை, பொன்அரிதாரம், உள்ளி, திப்பிலி, துரிசி, சாதிலிங்கம், கடுக்காய், உத்திராட்சம் களஞ்சி- 01, பற்படகம், ஆடாதோடை, கண்டங்கத்தரி, தூதுவளை நொச்சி இலைச்சாறுகளில் அரைத்து குண்டுமணி பிரமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருட்டிநிழல் உலர்த்தி - ஒரு நாளைக்கு இருவேளை ஒரு குளிசை வீதம் 3 நாளைக்கு தேன் பசுநெய், கற்கண்டு அனுமானத்தில் கொடுக்க சுவாதம் கைகால் எரிவு அழற்சி உஷ்ணம் பித்தம் தீரும்.

## இஞ்சி லேகியம்

இஞ்சி கொத்து - 1, சுக்கு, மிளகு, சீரகம், மல்லி, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, வால் மிளகு, கராம்பு இவைகள் களஞ்சி 5. தேன் 1/4 கொத்து பசுநெய் - 1/4 கொத்து, பசும்பால் - 1 கொத்து, கற்கண்டு இரு - 1கரண்டி - கொட்டப்பாக்கு பிரமாணம் ஒரு நாளைக்கு இரு நேரம் உண்ண உஷ்ணம், தலைநோய், இருதயவலி என்பன தீரும்.

## சுக்கு சூரணம்

கருஞ்சீரகம், நற்சீரகம், குறாசாணி, அதிமதுரம், ஓமம், இலவங்கம், கறுவா, திப்பிலி, திப்பிலிமூலம், பெருங்காயம், சித்தரத்தை, வெண்கோட்டம், கராம்பு, வசிவாசி, சாதிக்காய், உள்ளி, மல்லி கலவை - 1, சுக்கு கலவை 12 இவைகளை இடித்து அரித்து மாசீனியில் ஒரு நாளைக்கு இரு நேரம், ஒரு களஞ்சி வீதம் உண்ண பித்தம், தலை சுற்று, தலை மயக்கம், தலை பாரம், கிறுகிறுப்பு என்பன தீரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஞ்சி சூரணம்

சாதிக்காய், கராம்பு, ஏலம், இலவங்கப்பட்டை, ஓமம், இந்துப்பு, வெந்தயம், சுக்கு, மிளகு, வசம்பு, தேவதாரம், செவ்வள்ளி, இவை களஞ்சி - 1, இஞ்சி பலம் - 1, மூன்று பீடம் பண்ணி ஒரு நாளைக்கு இருவேளை தேன் பசு நெய்யில் கொட்டப்பாக்கு பிரமானம் உண்ண தலையிடி, தலைபாரம், பித்தம், சுளத்தி, மயக்கம் என்பன தீரும்.

இவை இவர் செய்த வைத்திய சேவையில் சில சிகிச்சை நிவாரணங்கள்

**Dr. பொன்னம்பலம், சாமித்தம்பி**
RAMP-JP-IAMP
**கல்முனை**
No.**13962**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை மருந்து குறிப்புகள் சில...

## மூட்டுவலிக்கு

புளியமிலை அரைத்து வீக்கத்திற்கு பற்றிடலாம்.
முடக்கொத்தான் கீரையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி இளஞ்சூட்டுடன் வீக்கமுள்ள இடங்களில் வைத்துக் கட்டி மறுநாள் அவிழ்த்து மறுபடி இதேபோல் கட்ட 3 நாட்களில் வீக்கம் குறையும்.

வாதராணி இலையை அரிந்து சட்டியில் இட்டு வேப்பெண்ணெய் சேர்த்து வதக்கி ஒரு துணியில் கொட்டி சூடாக இருக்கும் போது வலியுள்ள இடங்களில் ஒற்றடம் கொடுக்கலாம்.

## மூலநோய்க்கு

கருணை கிழங்கின் தோல் நீக்கி நிறு துண்டுகளாக வெட்டி உப்பு போட்டு நீரில் அவித்து எடுக்க வேண்டும். பின் நெய்யில் பொன்னிறமாக வறுத்து எடுத்து கொள்ளவும் 5,6 செத்தல் மிளகாய், 1தே. கரண்டி உழுத்தம் பருப்பு, 1 சிறங்கை தேங்காய்ப்பூ வறுத்து எடுத்தல், தேவையானளவு உப்பு, தேசிப்புளி சேர்க்கவும், உண்ணல்.

துத்தி இலை- 1பிடி
மஞ்சள் தூள் - 6g
இரண்டையும் நல்லெண்ணெயில் சேர்த்து வெளித்தள்ளும் மூலத்தில் பூசல்

அல்லது

துத்தி கீரையை நெய்யில் வதக்கி உண்ணலாம்.
வாழைப்பழச்சாறு 200ml பனங்கற்கண்டுச் சேர்த்து காலையில் அருந்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமல் சளி..

சுக்கு உலர்த்தி தோல் சுரண்டி பொடித்து அரித்து 2-4g பொடியை தேனில் குழைத்து காலை, மாலை 3 நாட்களில் உண்டுவர சளி குணமாகும்.

அதிமதுர வேரின் சிறு குச்சியை வாயில் போட்டு அடக்கி எச்சிலை விழுங்க கடுமையான இருமல் நீங்கும்.

மொசு மொசுக்கை, இலைகள் பறித்து தண்ணீரில் கழுவி அத்துடன் வேர்கொம்பு, மிளகு, சீரகம் ஒவ்வொன்றிலும் சிறிதளவு எடுத்து தூளாக்கி மொசுமொசுக்கை இலைகளுடன் பிசரி, காலை, மாலை 1 வாரம் சாப்பிட்டு வர சளி சம்பந்தமான நோய்கள் அகலும்.

குழந்தை இருமலுக்கு கற்பூரவள்ளி இலை வாட்டி பிழிந்து 1/2 1 தேக்கரண்டி தேனில் கலந்து கொடுக்கலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் நிலமைகளில் வெற்றிலை / சீந்தில் இலைகளை வாட்டி தாங்க கூடிய சூட்டில் மார்பில் ஒற்றடம் கொடுக்கலாம்.

# தலைப்பாரம் நீங்க..

விரல் மஞ்சளில் 1 துண்டு எடுத்து விளக்கெண்ணெய் தடவி திரி விளக்கில் காட்டி புகையை 2, 3 தரம் மூக்கினால் உறிஞ்ச தலைப்பாரம் நீங்கும்.

வில்வ இலைச்சாறு 50 ml , கருந்துளசி இலைசாறு 50 ml, நல்லெண்ணெய் 100 ml. சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்து ஆறிய பின் தினசரி தலைக்கு தடவி வர தும்மல். தலைப்பாரம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடற்புண்ணுக்கு...

மாதுளம்பழச்சாறு தினமும் 200 ml அருந்தல்

வில்வம் பழத்தை எடுத்து ஓட்டை உடைத்து சதையை எடுத்து சேர்த்து பிசைந்து காலையில் மட்டும் சாப்பிட்டு வர குடற்புண் ஆறும்.

அகத்தி கொழுந்தில் சொதி வைத்து சாதத்துடன் உண்ணல்.

சிறிதளவு அதிமதுரவேரை நைய இடித்து இரவு முழுவதும் ஊறவைத்து காலையில் வடித்து புடித்து வர குடற்புண் ஆறும்.

## பொடுகு நீங்க...

பொடுதலையை இடித்த சாறு எடுத்து 200ml சாறுக்கு 200ml நல்லெண்ணெய் காய்ச்சி சாறு வற்றியதும் வடிகட்டி தலையில் பூசலாம்.

## பேன் ஒழிய...

மருதானி பூவை தலையில் அடிக்கடி வைக்க கொள்ள பேன் விலகும். காட்டுசீரகத்தை எலுமிச்சம்பழசாற்றில் அரைத்து தலையில் பூசி 1hr ஊறவிட்டு முழுகிவர பேன் ஒழியும்.

## முகப்பரு மறைய

முகத்தை அடிக்கடி இளஞ்சூடான நீரில் கழுவ வேண்டும். தலையில் பொடுகு இருப்பின் அதற்கான சிகிச்சை செய்ய வேண்டும். திருநீற்றுபச்சை இலைகளை மைபோல அரைத்து பருக்களின் மீது பற்றுப்போடவேண்டும். பச்சிலை சாறு 200ml



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்கு 100ml தேங்காயெண்ணை சேர்த்து காய்ச்சி சாறு வற்றியது ஆறவிட்டு முகப்பருவுக்கு பூச முகப்பரு நீங்கி வசீகரம் பெறும்.

## முக வரட்சிக்கு...

Olive oil உடன் சம அளவு எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து முகம் வரட்சியடையும் போது பூசி வர வரட்சி தீரும்.

## வியர்வை நாற்றம் நீங்க...

ஆவாரம் பூக்களை உலாதத சம அளவு பயற்றம்மா கலந்து அரைத்து தினமும் தேய்த்து குளித்து வர வியர்வை நாற்றம் நீங்கும்.

## நகங்களில் ஏற்படும் பங்கஸ் தொற்றுக்கு மருதாணி பூசும் முறை

நிழலில் உலர்த்திய மருதாணி இலைகளைப் பொடியாக்கி மெல்லிய துணியில் நுண்ணிய பொடியாக அரித்து 100 கிராம் பொடியை ஒரு சிறிய பாத்திரத்தில் 1/2 டம்பர் தண்ணீரைக் கொதிக்க வைத்து, 1/2 தேக்கரண்டி தேயிலைப் பொடியைப் போட்டு மீண்டும் கொதிக்க வைத்து, அதில் சிறிது எலுமிச்சம் பழச்சாறு விட்டு மேலும் சில நிமிடங்கள் கொதிக்க வைத்து, வடிகட்டி அதில் மருதாணிப் பொடியை கொஞ்சம் கொஞ்சமாக கலந்து 10 சொட்டு யூகாலிப்டெஸ் தைலத்தை கலந்து வைத்துக்கொள்வதே மருதாணிப் பசையாகும். இதை நகங்களிற்கு தடித்த பற்றாக பூசி 3 மணிநேரம் கழித்து தண்ணீரில் கழுவாமல் சுரண்டி எடுத்துவிட்டு, கொஞ்சம் தேங்காயெண்ணெயைப் பூசிவிடவும், இதனால் நகங்களில் பங்கஸ் தொற்று வராமல் தடுப்பதுடன் நகங்களும் அழகாக பராமரிக்கப்படும்.

**Prepared by-M.lakshini (BSMS Final Year)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மை விட்டு பிரிந்த ஆன்மாவுக்காக சாகிய உறவுகள் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வர நாதாரை வேண்டி கண்ணீர் மலர்களை தூவுகின்றோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

அத்தனே அரனே ஆதி அமலனே உமையாளர் பங்கா.

பித்தனே பிரானே தில்லைப்பெரு நடமிட்டபாதா
சுத்த வெண்ணீறு பூசி சுடலையில் ஆடும் சோதி
கர்த்தனே கயிலைவாசா கடவுளே நமசிவாய.

கர்பனைக் கடந்தசோதி கதிருடல் விட்டுச்சீவன்
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டு வந்தார்.
சித்தமாய் உருத்திராயாயிச் சீவனை நகரில் புக்காது
நற்பதி மோட்ச வீடு நல்குவாய் நமசிவாய.

சங்கரா சம்போதேவா சதாசிவா நீலகண்டா
திங்களும் அரவம் குடும்ப சிவசிவா
இவரின் ஆத்மா தங்கு தடைகள் இன்றி தட்சணம்
அனைத்துக்கொண்டு அங்கு உன்பாதம் போற்ற
கௌரி அம்பிகா சமேத கேதிஸ்வர நாதரே
ஆண்டருள்வாய் நமசிவாயம்

சுபம்

தென்னாடுடை சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆலய அறங்காவலர் சபையினரும் சாகிய உறவுகளும் திருப்பழுகாமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரம் மூலம் நெல் நாற்றுநட்டுகை தொழில் நுட்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பாலான விவசாய நிலம் நெற் பயிர்ச் செய்கை நிலமாக காணப்படுகின்றதோடு பெரும்பாலான விவசாயிகள் நெற் பயிற் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். நெற் பயிற்செய்கை அிகளவில் மேற்கொள்ளப்படுகின்ற போதும் இப் பயிற் செய்கையில் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டி உள்ளது. நிலப்பண்படுத்தல் முதல்களை கட்டுப்பாடு பூச்சி பீடை கட்டுப்பாடு வரை பல சவால்களுக்கு முகம் கொடுத்தே இப்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறான கால கட்டத்தில் தான் இச் சவால்களை வெற்றி கொள்வதற்காக நெல் நாற்று நடும் இயந்திரம் மூலம் நெல் நாற்று நட்டு பயிர் செய்யும் தொழில்நுட்பம் விவசாயத்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நெல் நாற்று நடும் இயந்திரம் மூலம் நாற்று நடுகை செய்யும் பொழுது நெல் வயல் நன்றாக பண்படுத்தப்பட்டு இருக்கின்ற போது நாற்று மேடை தயாரிக்கப்படும். இந்த நாற்று மேடையை பொறுத்தமட்டில் நாற்றுத் தட்டிலும் மற்றும் பொலித்தின் இடப்பட்ட நாற்று மேடையிலும் உற்பத்தி செய்ய முடியும். நாற்றுத்தட்டெனில் ஏக்கருக்கு 80 நாற்றுத்தட்டுகள் போதுமானதாக இருக்கும் கட்டிகள் கற்துண்டுகள் அற்ற சேற்று மண்ணினை ஊடகமாக நிரப்பி அதன் மேல் முளைக்க வைத்த விதை நெல்லினை பரவி நாற்றுகளை பெற முடியும் பொலித்தீன் நாற்று மேடையெனின் வயலிலே நாற்று தட்டின் நீளத்திற்கு ஏற்றவாறு வயலிலே பொலித்தீன் இட்டு அதன் மேலாக ஊடகத்தினை நிரப்பி அதன் மேல் முளைத்த விதை நெல்லை பரவி நாற்றுக்கள் வளர்ந்ததும் பொலித்தீனை அகற்றி நாற்றுத் தட்டின் அளவுக்கு வெட்டி எடுக்க முடியும். நாற்று மேடைக்கு சம்பா வர்கம் எனின் ஏக்கருக்கு 15kg விதை நெல்லும் நாடு வர்க்கம் எனின் 18- 20kg விதை நெல்லு போதுமானதாக அமையும். இதன் மூலம் ஏக்கருக்கான விதை நெல் அளவும் குறைவானதாமவும் காணப்படும். நாற்று மேடையில் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்று தட்டில் இடப்பட்டு நெல் நாற்றுக்களை 10-12 நாட்கள் அளவில் நடுவது உகந்தது. 12-15 நாட்களிலும் நடமுடியும் ஆனால் 18 நாட்களுக்குள் நடவேண்டும் பிந்தினால் நெல்லின் பதியஅவத்தை பிந்தக்கூடிய வாய்ப்பு உள்ளது.

அந்த வகையில் நெல் நாற்று நட்டு 20 நாட்களுக்கு பின் களை கட்டுப்பாடாக இயந்திரங்களான கட்டும் கருவி பயன்படுத்த முடியும் நட்டு 10 நாட்களில் நாற்று நன்றாக நிமிர்ந்து வளர்ச்சி அடைந்துவிடும் இயந்திர களை கட்டும் கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் வரிசைகளுக் கிடையில் காணப்படும் களைகளை முற்றாக அழிக்க முடியும். பின் நெல் நாற்றுக்கள் நன்றாக வளர்ச்சி அடைந்ததும் களைப்பிரச்சினை இருக்காது. தேவை ஏற்படின் 14 நாட்களுக்குப்பின் மீண்டும் Power Weeder பயன்படுத்த முடியும். இதன் மூலம் களை நாசினி பாவனை இல்லாமலே சிறப்பாகவே களைகளைக் கட்டுப்படுத்த முடியும் இதே போன்று களை நெல்லும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

25 - 30 நாட்களில் மட்டம் பேர்வதை அவதானிக்க முடியும். ஒரு அடியில் சாதாரணமாக 15 - 20 மட்டம் வளர்வதை அவதானிக்க முடியும். அத்தோடு சிறந்த இடைவெளியில் பயிர்கள் காணப்படுவதால் வளர்ச்சியும் காணப்படும் விவசாயிகள் சாதாரணமாக கிடைக்கும் விளைச்சலை விட ஏக்கர் ஒன்றிற்கு 330 - 528 Kg அதிக விளைச்சலை சாதாரணமாக பெற முடியும். ஏக்கருக்கு 30 - 35 மூடைகள் சாதாரணமாக கிடைக்கின்ற போதும் நாற்று நடும் இயந்திரம் மூலம் நடும் விவசாயிகள் 40-45 மூடைகள் நெல்லைப் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**ம. சகாப்தன்** Dip.in.Agri, BSC.(Agriculture pmt)

**விவசாய போதானாசிரியர்**

**விவசாய திணைக்களம்**

**மட்டக்களப்பு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
1941
*
11
*
12



உதிர்வு
2023
*
07
*
31

பழுகாமத்தைப் பிறப்பிடமாகவும் நாவற்குடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். காசிபதி அரசரெத்தினம்

ஓய்வுபெற்ற விஞ்ஞான போதனாசிரியர்,
கடற்தொழில் திணைக்கள தகவல் பிரிவு - இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

அவர்கள் 31.07.2023. (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற காசிபதி வள்ளியம்மை அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அருணாச்சலம் கனகம்மா அவர்களின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுரேஷ், தர்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தினி, பாலமுரளி, மாணிக்கவாசகம், பிரகலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயம் வேலுப்பிள்ளை, அரியமலர், காலஞ்சென்ற அரசமணி, பெஞ்சமின் பாலா, பத்மஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் நீரஜா, பானுஜன், ஸ்ரீகன் ஆகியோரின் அப்பப்பாவும் அபிரா, அர்ச்சிதா, லக்ஷினி, சகானுதன் ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 2023.08.03 வியாழக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் நாவற்குடா இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பழுகாமம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.**
**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.**

தகவல் - குடும்பத்தினர்
077 6653768 / 075 0370694 21, புதிய கல்முனை வீதி, நாவற்குடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

காசுபதி + வள்ளியம்மை

- வேலுப்பிள்ளை
- அரியமலர்
- அரசரெத்தினம்
- அரசமணி
- பெஞ்சமின் பாலா
- பத்மஜோதி

அருணாசலம் + கனகம்மா

- செல்வநயினார்
- கதிரவேற்பிள்ளை
- சிவசுந்தரம்
- செல்வராஜா
- சிவசுப்பிரமணியம்
- புவனேஸ்வரி
- சிவசண்முகராஜா
- பஞ்சாட்சரம்

அரசரெத்தினம் + புவனேஸ்வரி

சுரேஸ் + சாந்தினி

- நீரஜா
- பானுஜன்
- ஸ்ரீகன்

தர்சிகா + பாலமுரளி

- அபிரா
- அர்ச்சிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதயச் சுடரின் அமரத்துவச்
செய்தியறிந்து நேரிலே வந்து
கலந்து கொண்டவர்களுக்கும், தொலைத்
தொடர்புகள் மூலம் அனுதாபம்
தெரிவித்தோருக்கும் எமது இல்லம்
வந்து பேருதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள்,
நண்பர்கள், மலர்மாலை அணிவித்து அஞ்சலி,
செலுத்தியவர்கள், சிரமம் பாராது பல வழிகளிலும் உதவி
புரிந்தவர்கள் மற்றும் இந்நினைவுச் சுடருக்கு பங்களிப்பு
செய்தவர்களுக்கும் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும்
31ம் நாள் ஆத்மா சாந்தி பிரார்த்தனைகளிலும் மதிய
போசனத்திலும் கலந்துகொண்ட அன்புள்ளங்கள்
அனைவருக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டுத் தந்த துர்க்கா
அச்சகத்தாருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 0652053060.